

புத்தூர் - வாதரவத்தையைப் பிறப்பிடமாகவும்
உரும்பிராயை வசிப்பிடமாகவும் கொண்ட,

அமரர்

# திரு.செல்லமுத்து விநாயகமூர்த்தி

## அவர்களின்

சிவபதப்பேறு குறித்த

# நினைவு மலர்

## 17.01.2007



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



புத்தூர் - வாதரவத்தையைப் பிறப்பிடமாகவும்
உரும்பிராயை வசிப்பிடமாகவும் கொண்ட,

அமரர்

# திரு.செல்லமுத்து வினாயகமூர்த்தி

அவர்களின்

சிவபதப்பேறு குறித்த

# நினைவு மலர்

**17.01.2007**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

எம்மைப் பெற்று அன்போடு வளர்த்துக்
கல்வியும் தந்து உலகில் திகழ வைத்த
எங்கள் குடும்ப முதல்வரே,

பிறந்த பதிக்கும் புகுந்த பதிக்கும்
தாங்கள் ஆற்றிய சேவையின் சிறப்பு,
கிரி தீபமெனப் பிரகாசிக்கின்றது.

செயற்கரிய செயல்களையெல்லாம்
செய்து வைத்த
தங்களது பாதக்கமலங்களில்
இந்த நறுமலரைச்
சமர்ப்பணம் செய்கின்றோம்.
வணக்கம்.

இங்ஙனம்
மனைவி, பிள்ளைகள்,
குடும்பத்தவர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அமரர்

# திரு. செல்லமுத்து வினாயகமூர்த்தி

அவர்கள்

தோற்றம்
27.10.1942

மறைவு
19.12.2006

### திதி நிர்ணயப் பாடல்

செல்லமுத்து தவப்புதல்வன்
சீர்லலிதாம் பிகைகணவன்
நல்லவினா யகமூர்த்தி
நவில்விய ஆண்டுமன்னும்
செல்வமார் கழியபரம்
திகழ் சதுர்த் தசித்திதியில்
அல்லலறுத் தாட்கொள்வான்
அரனடியிற் சேர்ந்தனரே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



திருச்சிற்றம்பலம்

# பஞ்சபுராணம்

## தேவாரம்

மீளா அடிமை உமக்கே ஆளாய்
பிறரை வேண்டாதே
மூளாத் தீப்போல் உள்ளே கனன்று
முகத்தால் மிகவாடி
ஆளாய் இருக்கும் அடியார் தங்கள்
அல்லல் சொன்னக்கால்
வாளாங் கிருப்பீர் திருவாரூரில்
வாழ்ந்து போதீரே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகம்

கண்களிரண்டும் அவன் கழல்கண்டு களிப்பன ஆகாதே
　　காரிகையார்கள் தம் வாழ்விலென்வாழ்வு கடைப்படும் ஆகாதே
மண்களில் வந்து பிறந்திடுமாறு மறந்திடும் ஆகாதே
　　மாலறியா மலர்ப் பாதமிரண்டும் வணங்குவதும் ஆகாதே
பன்களி கூர்தரு பாடலோ டாடல் பயின்றிடும் ஆகாதே
　　பாண்டிநன் னாடுடை யான்படை ஆட்சிகள் பாடுதும ஆகாதே
விண்களி கூர்வதோர் வேதகம் வந்து வெளிப்படும் ஆகாதே
　　மீன்வலை வீசிய கானவன் வந்து வெளிப்படும் ஆயிடிலே.

## திருவிசைப்பா

தனதனற் றோழா சங்கராசூல
　　பாணியே தாணுவே சிவனே
கனகநற்றூணே கற்பகக் கொழுந்தே
　　கண்கள் மூன்றுடையதோர் கரும்பே
அனகனே குமரவிநாயக சனக
　　வம்பலத் தமரர் சேகரனே
நுனகழலிணையென் னெஞ்சினு ளினிதாய்த்
　　தொண்டனேன் நுகருமாநுகரே.

## திருப்பல்லாண்டு

சீருந்திருவும் பொலியச்
　　சிவலோக நாயகன் சேவடிக்கீழ்
ஆரும்பெறாத அறிவு
　　பெற்றேன் பெற்றதார் பெறுவாருலகில்
ஊருமுலகுங் கழற
　　உளறியுமை மணவாளனுக் காட்
பாரும் விசும்பும் அறியும்
　　பரிசுநாம் பல்லாண்டு கூறுதுமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புராணம்

வேதநெறி தழைத்தோங்க மிகு சைவத்துறை விளங்கப்
பூதபரம்பரை பொலியப் புனிதவாய் மலர்ந்தழுத
சீதவள வயற் புகலித் திருஞான சம்பந்தன்
பாதமலர் தலைக்கொண்டு திருத்தொண்டு பரவுவாம்.

## திருப்புகழ்

உம்பர் தருத்தேனு மணிக் கசிவாகி
ஒண்கடலிற் தேனமுதத் துணர்வூறி
இன்பரசத்தே பருகிப் பலகாலும்
என்றனுயிர்க் காதரவுற்று அருள்வாயே
தம்பி தனக்காக வனத்து அணைவோனே
தந்தை வலத்தாவருள்கைக் கனியோனே
அன்பர் தமக்கான நிலைப் பொருளோனே
ஐந்து கரத்தானை முகப் பெருமானே

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்.

**திருச்சிற்றம்பலம்**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புத்தூர் - வாதரவத்தையைப் பிறப்பிடமாகவும்,
உரும்பிராயை வசிப்பிடமாகவும் கொண்ட

அமரர்

# திரு.செல்லமுத்து விநாயகமூர்த்தி

அவர்களின்

# வாழ்க்கை வழி....

இயற்கைவளம் பொருந்திய நாடு ஈழமணித் திருநாடு. இந்து சமுத்திர நித்திலம் என்ற புகழைப் பெற்ற இலங்காபுரியின் சிரமென விளங்குவது யாழ்ப்பாணம். யாழ்ப்பாணத்தின் பெரும்பிரிவுகளில் ஒன்று வலிகாமம்கிழக்கு. நீர்வளம் நிலவளம் நிறைந்த இப் பிரதேசத்தில் வாதரவத்தை ஒரு சிற்றூர் ஆகும். புத்தூருக்கு அண்மையில் உள்ள ஊர் இவ்வூர்.சைவத்தமிழ்ப் பாரம்பரியத்தைப் பேணி வாழ்கின்றவர்கள் அவ்வூர் மக்கள். கந்தர் செல்லமுத்து அவர்களும் செல்வி தங்கமுத்து சின்னத்தம்பி அவர்களும் இல்வாழ்க்கையில் இணைந்து கொண்டார்கள்.

"இல்வாழ்வா னென்பா னியல்புடைய மூவர்க்கும்
நல்லாற்றி னின்ற துணை

என்ற வள்ளுவர் வாக்குக்கு ஏற்ற வண்ணம் இவ்வூரில் இலட்சியத் தம்பதியராக வாழ்ந்து வந்தனர். செல்ல முத்து தங்கமுத்து தம்பதியர் வாதரவத்தை கேதுவுப்பிள்ளையாரை உள்ளன்போடு வழிபட்டு வந்தார்கள். விநாயகப் பெருமான் திருவருளால் பெற்று எடுத்த பிள்ளைக்கு வினாயகமூர்த்தி என்றே நாமம் சூட்டினார்கள்.

விநாயகமூர்த்திக்கு வயசு இரண்டு . தந்தையார் செல்லமுத்து அவர்கள் சிவபதம் அடைந்தார். தாயார் திருமதி.தங்கமுத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்லமுத்து அம்மையார் செய்வதறியாது திகைத்தார். கணவனை இழந்து கைமை எய்திய பொழுதிலும் ஏகபுத்திரனான விநாயக மூர்த்தியைக் கண்ணைஇமைகாப்பது போலக் காத்துவந்தார்.

விநாயகமூர்த்திக்கு வயது ஐந்து. வித்தியாரம்பமும் நடந்தது. வாதரவத்தை விக்கினேஸ்வராவித்தியாலயத்தில் ஆரம்ப வகுப்பிற் சேர்ந்து கல்விபயிலத் தொடங்கினார். சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியில் இடைநிலைக் கல்வியைத் தொடர்ந்தார். புத்தூர் சோமஸ்கந்தாக் கல்லூரியில் உயர்தரக்கல்வியைப் பெற்றார். பரீட்சைகளில் திறமையாகச் சித்தியடைந்தார்.

விளையாட்டுத் துறையில் மிகவும் விருப்பமுள்ளவராக விநாயகமூர்த்தி காணப்பட்டார். பாடசாலைகளிற் படிக்கும் காலங்களில் பல்வேறு சந்தர்ப்பங்களில் இடம் பெற்ற விளையாட்டுப் போட்டிகளிற் பங்கு பற்றி பரிசில்களை அமோகமாகப் பெற்றார். இவர் பெற்றுக் கொண்ட வெற்றிக் கேடயங்களோ பல. பெற்றோருக்கும் படித்த பாடசாலைகளுக்கும் இவ்வாறு பெரும் புகழை ஈட்டிக் கொடுத்தார்.

வாதரவத்தை ஸ்ரீகணேசா இளைஞர் விவசாயக் கழகத்தின் தலைவராகப் பல்லாண்டுகள் பணிபுரிந்து நல்ல பெயரைப் பெற்றுக் கொண்டார். கிராம முன்னேற்றக்கழகத்திலும் சனசமூக நிலையத்திலும் காலத்துக்குக் காலம் பல்வேறு பதவிகளை வகித்து குறித்த ஸ்தாபனங்களின் வளர்ச்சிக்காக உழைத்தார். இவ்வாறான தொண்டுகளினால் இவருக்கு ஊரில் தனிமரியாதை இருந்தது.

வவுனியா பெருந்தெருக்கள் திணைக்களத்தில் தொழில்நுட்ப உத்தியோகத்தராக நீண்ட காலம் பணிபுரிந்து ஓய்வு பெற்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உத்தியோகத்தில் இருந்து இளைப்பாறிய பின்னரும் வவுனியா வீதி அபிவிருத்தி அதிகாரசபை, வீதி அபிவிருத்தித் திணைக்களம் ஆகியவற்றில் ஒப்பந்தகாரராகவும், இருந்தார் என்பது குறிப்பிடத் தக்கது.

கல்விவளம் செல்வவளம்யாவும் ஒருங்கே அமைந்த பதி உரும்பிராய். திரு.வினாயகமூர்த்தியின் தாய்மாமனாரான திரு இராமலிங்கம் உரும்பிராயிற் பெண் எடுத்தவர். பெண்ணின் பெயர் சவுந்தரம், இராமலிங்கம் சவுந்தரம் தம்பதிகள் பெற்றெடுத்த பிள்ளைகளில் லலிதாம்பிகை (முகாமைத்துவ உதவியாளர் பிரதேச செயலகம் நல்லூர்) நான்காவது மகளாவர். திரு.வினாயகமூர்த்தி அவர்கள் செல்வி லலிதாம்பிகை அவர்களை 12.06.1975 அன்று பெரியோர்கள் வாழ்த்திசைக்க திருமணம் புரிந்தார். வினாயகமூர்த்தி லலிதாம்பிகை தம்பதியினர் நாடு போற்றத்தக்க வகையில் இல்லற நெறியை நன்கு கடைப்பிடித்தனர். ஆண்கள் நால்வரைப் பெற்றெடுத்தார்கள். அறிவறிந்த பிள்ளைகள் அவர்கள். நான்கு பிள்ளைகளையும் யாழ்ப்பாணம் சென்.ஜோன்ஸ் கல்லூரியில் சேர்த்து நன்கு படிக்க வைத்தனர். பெற்றோர் விநாயகமூர்த்தி லலிதாம்பிகை தம்பதியரின் இல்வாழ்வு பூத்துக் குலுங்கியது.

சிரேஷ்ட புதல்வன் செல்வன் ரஜீவன் பெங்களூர் பல்கலைக்கழகத்தில் படித்து கணணி விஞ்ஞான பட்டதாரியாகப் பட்டம் பெற்றார். யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அபிவிருத்தி உதவியாளராகப் பணிபுரிகின்ற ரஜீவன் தெல்லிப்பழை வீமன் காமத்தைச் சேர்ந்த சிவாஜினியைத் திருமணம் செய்துள்ளார்.

இரண்டாவது புதல்வன் மயூரன் இங்கிலாந்திலுள்ள ஹேர்ட் போர்ட் ஷயர் பல்கலைக்கழகத்தில் கணணிவிஞ்ஞானப் பட்டம் பெற்று இங்கிலாந்தில் உத்தியோகம் வகிக்கின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூன்றாவது புதல்வன் நிரூபன் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் முகாமைத்துவத் துறையில் இறுதிவருடத்தில் கல்வி பயில்கின்றார்.

கனிஷ்ட புத்திரன் சுஜீவன் மொறட்டுவப் பல்கலைக்கழகத்தில் பொறியியல் துறையில் இரண்டாம் வருடத்தில் கல்வி பயில்கின்றார்.

ஓய்வு பெற்ற பின் சுகதேகியாக ஊரில் உற்சாகத்துடன் நடமாடி வந்தார் திரு.வினாயகமூர்த்தி அவர்கள். திடீரென நோய்வாய்ப்பட்டார். யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட இவரைக் குணப்படுத்துவதற்கு வைத்தியர்கள் பெரிதும் முயன்றனர். விதி விட்டு வைக்கவில்லை.

நிகழும் வியவருடம் மார்கழி மாதம் மூன்றாம் நாள் திங்கள் இரவு 12மணி 45 நிமிடமளவில் (19.12.2006, 12.45 a.m) அபரபக்கத்துத் சதுர்த்தசியும் அனுஷ நட்சத்திரமும் பொருந்தி வந்த புண்ணிய வேளையில் புத்தூர் - வாதரவத்தையூர் திரு.செல்லமுத்து வினாயகமூர்த்தி அவர்கள் எல்லாம் வல்ல இறைவன் திருவடிகளை அடைந்தார்.

"நெருநந லுளனொருவ னின்றில்லை யென்னும்
பெருமை யுடைத்திவ் வுலகு"

(தமிழ் மறை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காசி முனிவர் அருளிச் செய்த

# விநாயகர் கவசம்

திருச்சிற்றம்பலம்

வளர்ச்சிகையைப் பராபரமாய் வயங்குவிநா
யகர்காக்க; வாய்ந்த சென்னி
அளவுபடா அதிகசௌந் தரதேக
மகோற்கடர் தாம் அமர்ந்து காக்க;
விளரறநெற் றியையென்றும் விளங்கியகா
சிபர்காக்க; புருவந் தம்மைத்
தளர்வில்மகோ தரர்காக்க; தடவிழிகள்
பாலசந் திரனார் காக்க;

கவின் வளரும் அதரங்கச முகர்காக்க;
தால் அங்கணக் கிரீடர் காக்க;
நவில்சிபுகம் கிரிசைசுதர் காக்க; நனி
வாக்கைவிநா யகர்தாம் காக்க;
அவிர்நகைதுன் முகர்காக்க அள் எழிற்செஞ்
செவிபாச பாணி காக்க;
தவிர்தலுறா திளங்கொடி போல் வளர்மணிநா
சியைச்சிந்தி தார்த்தர் காக்க;

காமருபூ முகந் தன்னைக் குணேசர்நனி
காக்க; களம் கணேசர் காக்க;
வாமமுறு இருதோளும் வயங்குகந்த
பூர்வசர்தாம் மகிழ்ந்து காக்க;
ஏமமுறு மணிமுலைவிக் கினவிநா
சன்காக்க இதயந் தன்னைத்
தோமகலுங் கணநாதர் காக்க; அகட்
டினைத்துலங்கு ஏரம்பர் காக்க;



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்கமிரண் டையுந்தரா தரர் காக்க;
பிருட்டத்தைப் பாவம் நீக்கும்
விக்கினகரன் காக்க; விளங்கிலிங்கம்
வியாளபூ டணர்தாம் காக்க;
தக்ககுய்யந் தன்னைவக் கிரதுண்டர்
காக்க; சகனத்தை அல்லல்
உக்ககண பன்காக்க; ஊருவைமங்
களமூர்த்தி உவந்து காக்க;

தாமுழந்தாள் மகாபுத்தி காக்க; இரு
பதம்ஏக தந்தர் காக்க;
வாழ்கரம்கிப் பிரப்பிரசா தனர்காக்க;
முன்கையை வணங்கு வார்நோய்
ஆழ்தரச் செய் ஆசாபூ ரகர்காக்க
விரல்பதும அத்தர் காக்க;
கேழ்கிளரும் நகங்கள்விநா யகர்காக்க;
கிழக்கினிற்புத் தீசர் காக்க;

அக்கினியிற் சித்தீசர் காக்க; உமா
புத்திரர்தென் திசை காக்க;
மிக்கநிரு தியிற்கணே சுரர்காக்க;
விக்கினவர்த் தனர்மேற்கென்னுந்
திக்கதனிற் காக்க; வாயுவிற்கசகன்
னர்காக்க; திகழு தீசி
தக்கநிதி பன்காக்க; வடகிழக்கில்
ஈசநந் தனரே காக்க;



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏகதந்தர் பகல்முழுதுங் காக்க; இர
வினுஞ்சந்தி இரண்டன் மாட்டும்
ஓசையின்விக் கினகிருது காக்க; இராக்
கதர்பூதம் உறுவே தாளம்
மோ்னியைபேய் இவையாதி உயிர்த்திறத்தால்
வருந்துயரும் முடிவி லாத
வேகமுறு பிணிபலவும் விலக்குபா
சாங்குசர்தாம் விரைந்து காக்க;

மதிஞானம் தவம்தானம் மானம்ஒளி
புகழ்குலம்வண் சரீரம் முற்றும்
பதிவான தனம்தானி யம்கிருகம்
மனைவிமைந்தர் பயில்நட் பாதிக்
கதியாவுங் கலந்துசர்வா யுதர்காக்க;
காமர்பவுத் திரர்முன் னான
விதியாகும்சுற்றமெலாம் மயூரேசர்
எஞ்ஞான்றும் விரும்பிக் காக்க;

வென்றிசீ விதங்கபிலர் காக்க; கரி
யாதியெலாம் விகடர் காக்க;
என்றிவ்வா றிதுதனைமுக் காலமுமோ
திடின்நும்பால் இடையூறு றொன்றும்
ஒன்றுறா, முனிவர்கள் ! அறிமின்கள்
யாரொருவர் ஓதினாலும்
மன்றஆங் கவர்தேகம் பிணியறவச்
சிரதேக மாகி மன்னும்.

**திருச்சிற்றம்பலம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஔவையார் அருளிச் செய்த

# விநாயகர் அகவல்

சீதக் களபச் செந்தா மரைப்பூம்
பாதச் சிலம்பு பலஇசை பாடப்
பொன்அரை ஞாணும் பூந்துகில் ஆடையும்
வன்ன மருங்கில் வளர்ந்து அழகு எறிப்பப்
பேழை வயிறும் பெரும்பாரக் கோடும்
வேழ முகம் விளங்கு சிந்தூரமும்
அஞ்சு கரமும் அங்குச பாசமும்
நெஞ்சில் குடிகொண்ட நீல மேனியும்
நான்ற வாயும் நாலிரு புயமும்
மூன்று கண்ணும் மும்மதச் சுவடும்
இரண்டு செவியும், இலங்கு பொன்முடியும்
திரண்ட முப்புரிநூல் திகழொளி மார்பும்
சொற்பதம் கடந்த துரிய மெஞ்ஞான
அற்புதன் ஈன்ற கற்பகக் களிறே !
முப்பழம் நுகரும் மூஷிக வாகன !
இப்பொழுது என்னை ஆட்கொள்ள வேண்டித்
தாயாய் எனக்குத் தானெழுந்து அருளி
மாயாப் பிறவி மயக்கம் அறுத்துத்
திருந்திய முதல்ஐந் தெழுத்தும் தெளிவாய்ப்
பொருந்தவே வந்துஎன் உளந்தனில் புகுந்து.
குருவடிவு ஆகிக் குவலயம் தன்னில்
திரு அடி வைத்துத் திறம்இது பொருள்என
வாடா வகைதான் மகிழ்ந்து எனக்கு அருளிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோடாயுதத்தால் கொடுவினை களைந்தே
உவட்டா உபதேசம் புகட்டி என்செவியில்
தெவிட்டாத ஞானத் தெளிவையும் காட்டி
ஐம்புலன் தன்னை அடக்கும் உபாயமும்
இன்புறு கருணையினி தெனக்கு அருளிக்,
கருவிகள் ஒடுங்கும் கருத்தினை அறிவித்து
இருவினை தன்னை அறுத்து இருள் கடிந்து
தலமொரு நான்கும் தந்து எனக்கு அருளி,
மலமொரு மூன்றின் மயக்கம் அறுத்தே,
ஒன்பது வாயில் ஒருமந் திரத்தால்
ஐம்புலக் கதவை அடைப்பதும் காட்டி
ஆறா தாரத்து அங்குச நிலையும்
பேறா நிறுத்திப் பேச்சுரை அறுத்தே,
இடை பிங்கலையின் எழுத்து அறிவித்து
கடையிற் சுழுமுனைக் கபாலமும் காட்டி,
மூன்று மண்டலத்தின் முட்டிய தூணின்
நான்றெழு பாம்பின் நாவில் உணர்த்திக்,
குண்டலி அதனிற் கூடிய அசபை
விண்டெழு மந்திரம் வெளிப்பட உரைத்து,
மூலா தாரத்து மூண்டெழு கனலைக்
காலால் எழுப்பும் கருத்து அறிவித்தே
அமுத நிலையும் ஆதித்தன் இயக்கமும்
குமுத சகாயன்குணத்தையும் கூறி,
இடைச் சக்கரத்தின் ஈரெட்டு நிலையும்
உடல்சக் கரத்தின் உறுப்பையும் காட்டிச்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சண்முக தூலமும் சதுர்முகச் சூக்கமும்
எண்முகம் ஆக இனிதெனக்கு அருளிப்,
புரியட்ட காயம் புலப்பட எனக்குத்
தெரி எட்டு நிலையும் தெரிசனப் படுத்திக்
கருத்தினில் கபால வாயில் காட்டி,
இருத்தி முத்தி இனிதெனக்கு அருளி,
என்னை அறிவித்து எனக்கு அருள்செய்து
முன்னை வினையின் முதலைக் களைந்தே
வாக்கும் மனமும் இல்லா மனோலயம்
தேக்கியே என்றன் சிந்தை தெளிவித்து
இருள்வெளி இரண்டிற்கு ஒன்றிடம் என்ன
அருள் தரும் ஆனந்தத்து அழுத்தி, என்செவியில்
எல்லை இல்லா ஆனந்தம் அளித்து
அல்லல் களைந்தே, அருள்வழி காட்டிச்,
சத்தத்தின் உள்ளே சதாசிவம் காட்டிச்,
சித்தத்தின் உள்ளே சிவலிங்கம் காட்டி,
அணுவிற்கு அணுவாய் அப்பாலுக்கு அப்பாலாய்க்
கணுமுற்றி நின்ற கரும்புள்ளே காட்டி,
வேடமும் நீறும் விளங்க நிறுத்திக்,
கூடுமெய்த் தொண்டர் குழாத்துடன் கூட்டி,
அஞ்சக் கரத்தின் அரும்பொருள் தன்னை
நெஞ்சக் கருத்தின் நிலை அறிவித்துத்,
தத்துவ நிலையைத் தந்து எனைஆண்ட
வித்தக! விநாயக! விரைகழல் சரணே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிந்திக்கச் சில வரிகள்

- பிறர் செய்வதில், எது உனக்குப் பிடிக்கவில்லையோ, அதை நீ மற்றவர்களுக்குச் செய்யாதே.
- நல்லதையோ, தீயதையோ எதை ஒருவன் செய்தாலும் அதன் விளைவுகள் அவனைத் தொடர்ந்து கொண்டே இருக்கும்.
- பணம் இல்லாவிட்டால் உன்னை யாருக்கும் தெரியாது. பணம் இருந்தால் உன்னை உனக்கே தெரியாது.
- பணம் போகும் போது அதற்கு நூறு கால்கள், வரும் போது இரண்டு கால்கள்.
- நீ சந்தோசமாக இருக்கும்போது வாக்குறுதிகளைக் கொடுக்காதே. நீ கவலையோடு இருக்கும் போது கடிதங்களை எழுதாதே.
- தோல்வியைக் கண்டு அஞ்சுபவர்களிடம் இருந்து வெற்றி தானாகவே ஒதுங்கிக் கொள்கின்றது.
- சோம்பலின் விளைவு வறுமை. முயற்சியின் விளைவு மூலதனம்
- நெற்றியைக் காயப்படுத்துவதை விட முதுகை வளைத்துச் செல்வது நல்லது.
- விழுவது வெட்கமல்ல விழுந்து கிடப்பதே வெட்கமானது.
- அறிவு இல்லாத கண்ணியம் பலவீனமானது, பயனற்றது. ஆனால் கண்ணியம் இல்லாத அறிவு ஆபத்தானது. அஞ்சத்தக்கது.
- நல்ல அறிவு எந்த மூலையில் எவ்வளவு தூரத்தில் இருந்த போதிலும் அதைத் தேடிச் செல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உன்னால் முடியுமானால்.......

- உன் சுற்றத்தார் நிதானம் தவறிவிட்டு அப்பழியை உன்மீது சுமத்திட்ட போதிலும் நிலைகுலையாது நிதானமாய் நடந்திட உன்னால் முடியுமானால்.......

- எல்லோரும் உன்னைச் சந்தேகிக்கும் போது அவர்களது சந்தேகத்துக்கு இடமளித்துவிட்டு உன்மீது விசுவாசம் வைக்க உன்னால் முடியுமானால் ................

- உன்னைப் பற்றிப் பொய்யுரைக்கப்படும் போது நீ பொய்யுரைக் காதிருக்க உன்னால் முடியுமானால் ......

- மற்றோர் உன்னை வெறுக்கும் போது உன் மனதில் வெறுப்புக்கு இடமளிக்காதிருக்க முடியுமானால்........

- அதிகம் நல்லவன் போல் காட்டிக் கொள்ளாமலும் பேரறிஞன் போல் பேசாமலும் இருக்க உன்னால் முடியுமானால்........

- உன்னால் கனவு காணவும். ஆனால் அக்கனவுகளை உன் எஜமானராக்கிடாமலும் இருக்க முடியுமானால்...........

- உன்னால் சிந்திக்கவும் ஆனால் அந்தச் சிந்தனைகளே இலட்சியமெனக் கொள்ளாமலும் இருக்க முடியுமானால்.......



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

◈ சாதாரண சனங்களோடு உறவாடிப் பழகினாலும் உன் நற்குணங் களை இழந்திடாதிருக்க முடியுமானால் .....

◈ பகைவர்களோ, பாசமிகு நண்பர்களோ உன்னைக் கோபிப்பதற்கு இடமளிக்காதிருக்க முடியுமானால்.....

◈ எல்லோரையும் மதித்துப் போற்றும் அதே வேளையில், எவரையும் தலையிற் தூக்கி வைத்துக்கொள்ளாதிருக்க உன்னால் முடியு மானால்.....

◈ பெறுமதிமிக்க ஒவ்வொரு நிமிடத்தையும் பயன்மிக்க அறுபது வினாடிகளால் நிரப்பிட உன்னால் முடியுமனால் ...


◈ இந்தப் பூமியும் அதிலுள்ள அத்தனையும் நிச்சயமாய் உனக்குரியவை தான் மகனே! அன்றியும் நீ ஓர் உண்மை மனிதனாவாய் மகனே !

கூட்டிடும் கணக்காக கொள்ளுவோர் வயதே செல்ல
நாட்டிய மாயவாழ்வு நமக்கொரு துயரதென்று
வீட்டினை விரும்பி நின்ற விரைந்தவர் விடையும் கொண்டால்
நீட்டிய சோகம்தனை நெஞ்சினில் கொள்வதேனோ.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சாவழி




* அமரர்களைக் குறிக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# நன்றி ஒரு சொல்....



அமரர் திரு.செல்லமுத்து விநாயகமூர்த்தி அவர்களின் பிரிவுச் செய்தி கேட்டு ஓடோடி வந்து பல விதத்திலும் ஆதரவும், உதவிகளும் உளமார நல்கிய அயலிலுள்ள பெருந்தகை யோருக்கும், இரங்கற் செய்திகள், தொலைபேசி மூலம் தொடர்புகள் கொண்டு அனுதாபம் தெரிவித்தோருக்கும், உற்றார், உறவினர், நண்பர்களுக்கும், அலுவலக நண்பர்கள், இறுதிக் கிரியைகளில் அன்னாருக்கு மலர் வளையங்கள், மலர் மாலைகள் சாத்தியும், இறுதிக் ஊர்வலத்திலும், இறுதி கிரியைகளில் கலந்து கொண்டோருக்கும், ஒத்தாசைகள் புரிந்த அன்பு நெஞ்சங்களுக்கும், மற்றும் அந்தியேட்டிக் கிரியை களிலும் இன்று நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் கலந்து கொண்ட அனைவருக்கும், இம்மலரினை அழகுற அச்சிட்டுத்தந்த கரிகணன் பிறிண்டேர்ஸ் நிறுவனத்தாருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

நன்றி

"திருவரங்கம்"
உரும்பிராய் கிழக்கு,
உரும்பிராய்.
17.01.2007



இங்ஙனம்
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதாசாரம்



எது நடந்ததோ அது நன்றாகவே நடந்தது
எது நடக்கின்றதோ அது நன்றாகவே நடக்கின்றது
எது நடக்க இருக்கின்றதோ அதுவும்
நன்றாக நடக்கும்
உன்னுடையது எதை இழந்தாய்
எதற்காக அழுகின்றாய்?
எதை நீ கொண்டு வந்தாய்
அதை நீ இழப்பதற்கு
எதை நீ எடுத்துக் கொண்டாயோ
அது இங்கேயே கொடுக்கப்பட்டுள்ளது
எது இன்று உன்னுடையதோ அது
நாளை மற்றொருவருடையாதாகின்றது
மற்றொரு நாள் அது வேறொருவருடையதாகும்
இதுவே உலக நியதியும்
எனது படைப்பின் சாராம்சமுமாகும்.

–பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்

Harikanan Printers, Jaffna.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org